# அலிகர் இயக்கமும் தமிழகக் கல்வி நிறுவனங்களும்

*முனைவர் மு.பா. அமானுல்லா*
*உதவிப் பேராசிரியர்*
*அரபு பாரசீகம் மற்றும் உருதுத் துறை*
*சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை*

இன்று தமிழ்நாட்டிலுள்ள முஸ்லிம் சிறுபான்மையினரின் கல்வி, தொழில், தேசிய அளவில் சமூக, பொருளாதாரம், கலாச்சாரம் மற்றும் பண்பாட்டில் ஓர் உயர்ந்த நிலை ஏற்பட்டுள்ளது, மற்ற மாநிலங்களை விட தமிழக முஸ்லிம்கள் கல்வியறிவிலும் பொருளாதார அடிப்படையிலும் சிறந்து விளஙங்குகிறார்கள் என்றால் அது அலிகர் இயக்கத்தினால்தான். இதற்கு 1901 ஆம் ஆண்டில் சென்னையில் நடைபெற்ற 15வது ''ஆங்கிலோ முகம்மதன் எஜீகேஷனல் கான்பரன்ஸ்'' தான் மூலக்காரணம் ஆகும்.

மே 1886 இல் சர் சையது அகமதுகான் தனது கல்வி இயக்கத்தை வலுப்படுத்தவும் அதனைப் பொது உடமையாக்கவும் அலிகரில் ''முகம்மதன் எஜீகேஷனல் கான்பரன்ஸ்'' என்ற அமைப்பை ஏற்படுத்தினார். இதன் முதல் செயலாளராக சர் சையது அகமது கானும் இதன் தலைவராக சர்தார் முகமது ஹாயத் கானும் தோர்ந்தெடுக்கப்பட்டனர் இந்த அமைப்பின் மாநாடு ஒவ்வொரு ஆண்டும் வெவ்வேறு நகரங்களில் நடைபெற்று வந்தது. மாநாட்டின் சொற்பொழிவுகள் அலிகர் இன்ஸ்ட்டியூட் கஜெட்டில் பிரசுரிக்கப்பட்டு வந்தது. 1890 – டிசம்பர் மாதம் இதன் 5 ஆவது மாநாடு அலகாபாத்தில் ''ஆல் இந்திய முஸ்லிம் எஜீகேஷனல் கான்பரன்ஸ்'' என்று மாற்றம்பெற்று நடைபெற்றது. இதன் 10-ஆம் மாநாடு ''முகம்மதன் ஆங்கிலோ ஓரியண்டல் கான்பரன்ஸ்'' என்று பெயர்மாற்றம்பெற்று நடைபெற்றது, இறுதியாக டிசம்பர் 1923 - ம் ஆண்டு அலிகரில் இதன் 36 – ஆம் மாநாடு ''ஆல் இந்தியா முஸ்லிம் எஜீகேஷனல் கான்பரன்ஸ்'' எனப்பெயர் மாற்றம் பெற்று நடைபெற்றது, இதன் 41 – ஆம் மாநாடு மீண்டும் சென்னையில் சர் அப்துல் காதர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாட்டில் ஓர் நூற்றாண்டு தழுவிய கல்வியியல் செயற்முறைகைப் பற்றி விவரிப்பதற்கு முன் சென்னையில் டிசம்பர் 1901, 27,28,29 மற்றும் 30 தேதிகளில் நடைபெற்ற பதினைந்தாவது முகம்மதன் ஆங்கிலா ஓரியண்டல் மாநாட்டைப்பற்றி சுருக்கமாக சொல்லி விடுவது அவசியம். இந்த மாநாட்ழன் விரிவான விளக்கம் '(புரோசிடிங்) 335 பக்கம் கொண்டதாக 1902 ஆம் ஆண்டு முபீதே ஆம் முகமது காதர் அலிகான் சூபி அவர்களால் ஆக்ராவிலிருந்து வெளியிடப்பட்டுள்ளது. இந்த மாநாட்டில் மதராஸ் பிரசிடென்சியின் ஆளுநர் (இதில் தற்போதைய தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரப்பிரதேசம், தெலுங்கானா ஒரிசா, கேரளா, பாண்டிச்சேரி மற்றும் அலிகரிலிருந்து வந்த குழுவில் நவாப் முஹ்சினுல் முல்க், அல்லாமா ஷிப்லி நோமானி, உருதுத் தந்தை மௌலவி அப்துல்ஷக், காஜா குலாமுஸ் ஸகலைன், ஷேக் அப்துல் காதர், தியோடர் மாரீசன், டி.டபள்யு. பிரவுன், ஜாபர் அலிகான், மௌலவி பஷீருத்தின் மற்றும் மலிக் ஷீஜாவுத்தீன் மற்றும் பலர் கலந்து கொண்டனர், இம்மாநாட்டின் முதல் விழாவில் பேசிய நவாப் முஹ்சினுல் முல்க் இவ்வாறு கூறினார்.

''இந்த தேசிய மாநாடு சென்னையில் நடைபெறும் என்று நாம் மனதில் கூட நினைத்துப் பார்க்கவில்லை ஏனெனில் மதராஸ் முஸ்லிம்கள் வேறு மாநிலத்தை விட ஆங்கில கல்வியில் பின் தங்கியிருந்தார்கள் என்று நாங்கள் அரசு அறிக்கைகளில் பார்த்திருக்கிறோம், மேலும் இங்கு மேற்கத்திய மற்றும் ஆங்கிலேயக் கல்விக்கு எதிர்ப்பும் வேறுபட்ட பார்வையும் உள்ளதாக நாங்கள் பத்திரிகைகளில் படித்திருக்கிறோம், மேலும் அலிகர் குழுவினரை இங்குள்ளவர்கள் கடும்பார்வையால் பார்ப்பதாகவும், நாங்கள் அறிந்திருக்கிறோம், மதர் சதுல் உலூம் இயற்கை விரும்பிகள் மற்றும் நாத்தீகர்களின் மதராஸாவாக அறிந்திருந்தார்கள், எங்கள் செயல்களை இங்குள்ளவர்கள் எங்கள் செயல்களைத்தவறான செயல்களாகவும் இங்குள்ளவர்கள், நினைத்துக் கொண்டிருந்தார்கள், அப்படி இருக்கையில் எங்களை மதராஸ் வாசிகள் அழைப்பார்கள், இங்கு இந்த மாநாடும் நடைபெறும் என்று நாங்கள் நம்பவில்லை. ஆனால் இங்குள்ள சில சீர்மிகு முஸ்லிம்கள் எங்களுக்கு அழைப் விடுத்து

இங்கே மாநாட்டுக்கு ஏற்பாடும் செய்யப்படுவதை அறிந்து எங்களுக்கு ஆச்சரியமும் சந்தோஷமும் ஏற்பட்டது, எங்களுக்கு இதே நேரத்தில் லக்னோவில் மாநாட்டிற்காக அழைப்பு விடுத்திருந்தார்கள் விழா முன்னெற்பாடுகளும் செய்யப்பட்டு வந்தன. ஆனால் அவர்களிடம் வேண்டுகோள் (எக்ஸ்யூஸ்) கேட்டுவிட்டு உங்களின் அழைப்பை ஏற்றும் நாம் இங்கு வந்தடைந்தோம்."[1]

இம்மாநாட்டின் நோக்கம், அறிக்கையை ஆறாய்கையில் இம்மாநாட்ழன் பேச்சாளர்கள் குறிப்பாக அலிகரிலிருந்து வந்திருந்த குழுவினர் சமுதாயத்தின் அறியாமையை எண்ணி செயலில் ஈடுபடுத்தவும், கல்வியின் பக்கம் அவர்களை ஈர்க்கவும் அவர்களுக்குச் சொல்லியும், கொஞ்சியும் ஆர்வத்தை ஏற்படுத்தியும், பலப்படுத்தியும், ஆறுதல் செய்தும், அவர்களின் கண்ணீரைத் துடைத்தும்மாக பல வகையில் அவர்களின் மனதில் இல்லாத முறையைச் செயல்படுத்தியிருக்கிறார்கள், இந்த அதிசயக் குழுவின் தன்னலமற்ற ஈடுபாட்டினை இந்த மாநாட்டில் பேசிய சொற்பொழிவுகளிலிருந்து நாம் அவர்களின் சொற்பொழிவிலிருந்து ஒரு பத்தியை இங்கே குறிப்பிடுகிறேன்.

> ஏன் இவர்கள் இங்கே குழுமியிருக்கிறார்கள் இங்கே என் துதி பாடல்களைக் கேட்கும் கூட்டமாக இது என்றா – நல்ல நல்ல சொற்பொழிவுடன் நிகழ்த்தப்பெறும் என்றா - இல்லை. இல்லவே இல்லை இந்த கூட்டம் வேடிக்கைப் பார்க்க வரவில்லை இது திரையரங்கமோ, பட்டிமன்றமோக் கேளிக்கை கூட்டமோ இல்லை, மாறாக இது இரங்கல் மற்றும் துக்கக் கூட்டம், யாரடைய துக்கம் சமுதாயத்தை விடுங்கள் இந்த துக்கம் ஒவ்வொருவரின் துக்கம் உங்களுக்ககுத்தங்கள் சகோதரரின் கவலைக்கூட இல்லாமல் இருக்கலாம். ஆனால் தன்னைப்பற்றியும் தன் சந்ததியைப்பற்றியம் கவலை கண்டிப்பாக இருக்கும் அல்லவா."[2]

அடுத்த இந்த மாநாட்டின் சொற்பொழிவுகளை ஆராய்ந்தால் இருபாதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் தென்னிந்தியாவில் முஸ்லிம்களின் ஒரே ஒரு கல்லூரி கூட இல்லாமல் இருந்தது தெரிய வருகிறது, மரராஸ் பிரசிடென்சியில் மற்ற சமுதாயத்தை காட்டிலும் முஸ்லிம் சமுதாய மக்கள் ஒரு சதவீதம் சுட பட்டம் பெற்றவர்களாக இல்லை. அதனால் முஸ்லிம்களுக்கு கல்வியில் தனிச் சலுகை மற்றும் சிறப்பு கவனம் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்ழருந்ததை சர் ஷேக் அப்துல் காதர் தனது சொற்பொழிவில் இதனைக் குறிப்பிட்டு பேசுகையில், "வடஇந்தியாவில் முகம்மதன் கல்லூரி அலிகர் மற்றும் இஸ்லாமிய கல்லூரி லாகூரைத் தவிர இந்தியா முழுமையில் முஸ்லிம்களுக்கென வேறு எந்த கல்லூரியும் இல்லை தென் இந்தியாவில் முஸ்லிம்களுக்கென சென்னையில் (மதராஸ்) ஒரே ஒரு அரசுப் பள்ளி நிறுவப்பெற்றது. அந்தப் பள்ளியின் வளர்ச்சி மற்றும் அதற்கு கட்டிடங்களுக்காக இந்த மாநாட்டிலே தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மதரஸயே ஆஜம் மார்க்கக்கல்வி மற்றும் பயிற்சிக்காக 1871 – ம் ஆண்டு வாலாஜா பள்ளிவாசல் வளாகத்தில் நவாப் முஹம்மத் கௌஸ்கான் அவர்கள் நிறுவினார்கள், நவாப் ஆங்கிலேயர்கிடம் ஓய்வூதியம் பெற்று கொண்டிருந்தாலும் இந்த பள்ளிக்காக தன் வாழ்நாள் வரை மாதா மாதம் 1000 ரூபாய் நன்கொடையாக வழங்கி கொண்டிருந்தார். அவரின் இறப்பிற்குப்பின் ஆங்கிலேயே அரசு இதனைத் தன் பொறுப்பில் ஏற்றுக் கொண்டது. இதன் பிறகும் தொடர்ந்து ஒரு வருடம் மாறுபட்டு ஆங்கிலேயே கல்வி பள்ளியாக மாற்றப்பட்டாலும் அதன் பெயர் மதரஸயே ஆஜம் என்றே இருந்தது. இன்றும் இந்தப் பள்ளி "அரசினர் மதரஸயே ஆஜம் மேணிலைப்பள்ளி" என்று தான் அழைக்கப்படுகிறது.

சென்னையில் நடைபெற்ற "முஹம்மதன் ஆங்கிலோ ஓரியண்டல் மாநாட்டின்" அமைப்பாளர்களில் பிரபலமான ஒருவர் அப்துல் ஹாதிபாஷா ஆவார். ஸ்பிரிங் ரோட்டில் அமைந்திருந்த இவரது பங்களாவில் தான் இந்த நான்கு நாள் மாநாடு நடைபெற்றது, இந்த மாநாட்டின் குழுவில் நீதியரசர் போடாம் இதன் தலைவராகவும் முஹம்மது அப்துல் ஹாதிபாஷா இதன் பொதுச் செயலாளராகவும் மௌல்வி ஜியாவுத்தீன் முகம்மது இதன் இணைச்செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இந்த குழுவினரைக் கொண்டு தான் 1901 – ஆம் ஆண்டு ஜனவரி 1 ம் நாள் தென்னிந்திய முஸ்லிம் கல்வி சங்கம் (Muslim Educational Association of Southern India - MEASI) அமையப் பெற்றது. இதனை சுருக்கமாக மியாசி என்று அழைக்கப்படுகிறது. இதனை சுருக்கமாக மியாசி என்று அழைக்கப்படும். மியாசி தான் தமிழ்நாட்டிலே முஸ்லிம்களுக்கான மிகப் பெரிய கல்வி நிறுவனமாகும். இதைத் தவிர தற்போது உள்ள அனைத்து முஸ்லிம் கல்வி நிறுவனங்களும் இதன் கிளைகளே ஆகும் இவை அனைத்து நிறுவனற்களின் வேர்களும் மியாசியிலேயே வந்து சேரும்.

மியாசி அமைப்பு அலிகர் இயக்கத்தின் தொடர்ச்சியே அன்று வேற அல்ல, இதன் பிறப்பிடம் முகம்மதன் ஆங்கிலோ ஓரியண்டல் கானபரன்ஙின் 15-ஆவது விழாவேதான். தற்போது மியாசியின் தலைவராக ஆற்காட்டு நவாப் முகம்மது அப்துல் அலி அஹிம்ஷா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். மாநிலத்தின் பெரிய பெரிய தொழிலதிபர்கள், கல்வியாளர்கள் மற்றும் பெரிய அமைப்பை சார்ந்தவர்களும் செல்வந்தர்களும் இதன் பொதுக்குழுவில் உறுப்பினராவது பெருமைக்குரிய ஒன்றாக கருதுகின்றனர் மியாசியின்கீழ் பின்வரும் நிறுவனங்கள் கல்விச் சேவையில் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. புதுக் கல்லூரி (1951), மியாசி மெட்ரிக் மேல் நிலைப்பள்ளி (1985), மியாசிமேலாண்மை நிறுவனம் (1987) மியாசிசேரிடபுள் டிரஸ்ட் (1992) மியாசி அகாடமி ஆப் ஆர்கிடெக்சர் (1997) மியாசி உருது அகாடமி (1998) மியாசி இன்ஸ்டியூட் ஆப் இன்பார்மெஷன் டெக்னாலஜி (2001) மியாசி கல்வியியல் கல்லூரி (2004) மற்றும் மியாவி சார்டட் அக்கவுண்ட் அகாடமி (2014). இந்த நிருவனங்கள் அனைத்தும் சென்னை மாநகரத்தில் 3 ஏக்கர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ளன.

இதற்கிடையே வடஇந்தியாவிலிருந்து புகழ்பெற்ற கல்வியாளர்கள், அறிஞர்கள் இங்கு வருகைத்தந்தார்கள், இங்கு இருந்த நல்ல உள்ளங்களின் பரந்த பார்வையும். நல்ல குணமும், பரந்த மனப்பான்மையம் மற்றும் நன்மைக்காக இவர்களின் ஈடுபாடும் இங்கேச சிறப்பச்சொற்பொழிவுகள் நடைபெற ஏதுவாக அமைந்தன. 1970 ம் ஆண்டு ஜீலை 27 முதல் ஆகஸ்டு 1 வரை குர்ஆன் கல்வியினைப்பற்றி மௌலானா அப்துல் மாஜித் தர்யாபாதி அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்கள் மியாசியின் மேணாள் தலைவர் மறைந்த டி.அப்துல் வாஜித் அவர்கள் இதனை ஏற்பாடு செய்திருந்தார்கள் இந்தச் சொற்பொழிவுகள் “முஷ்கிலாதுல் குர் ஆன் “எனும் தலைப்பில் நூலாக வெளியிடப்பட்டது.

சென்னையில் நடைபெற்று முகம்மதன் ஆங்கிலோ ஓரியண்டல் மாநாட்டிற்க்குப்பிறகு உடனே ஈர்க்கப்பட்டவர்களில் சென்னையிலிருந்து 200 கி.மீ தூரத்தில் அமைகின்ற வாணியம்பாழ நகரத்தார்கள் ஆவர், உருது சிறுகதைக்குப்புகழ்பெற்ற எழுத்தாளர் திருமதி. ஹிஜாப் இம்தியாஸ் அலி (முதல் இந்தியப் பெண் விமானி) மற்றும் புகழ்பெற்ற சானேட் எழுத்தாளர் அஜீஸ் தமன்னாயி அவர்களும் இங்கே தான் பிறந்தார்கள்.

**அக்பர் ஜாஹித் தனது புத்தகம் “அக்ஸே வாணியம்பாடியில்” எழுதுகிறார்**

“இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் தென்னிந்தியா முழுவதும் ஒரே ஒரு கல்வி நிறுவனமோ பள்ளியோ முஸ்லிம் சமுதாய கலாச்சாரம் மற்றும் முன்னோர்களின் வழிமுறையைப்பின்பற்றி மதச்சார்பற்ற உயர்ந்த கல்விக்கான ஏற்பாடு செய்யப்பட்டதாக இருந்ததில்லை. அந்த நேரத்தில் தான் சர் சைய்யது அகமது கானின் அலிகர் இயக்கம் தொடங்கி இயங்கி கொண்டிருந்தது, இதன் தாக்கம் வாணியம்பாடி முஸ்லிம்களுக்கிடையே புத்துணர்வையம், வீரத்தையும் ஏற்படுத்தியது. இவர்கள் முழுஉற்சாகத்துடனம், விவேகத்துடனும் எழுந்தார்கள். மேலும் முஸ்லிமகளுக்கிடையே கல்வி விழிப்புணர்வு ஏற்படுத்தவும் ஆங்காங்கே கல்வி நிறுவனங்கள் உருவாக்கவும் கை விளக்கேந்திய காரிகையைப்போல் செயல்பட்டார்கள், அப்போதுதான் சென்னையில் ஆல் இந்திய முஸ்லிம் எஜீகேஷனல் கான்பரன்ஸ் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து 1901ஆம் ஆண்டு வாணியம்பாடி முஸ்லிம்களுக்கிடையே கல்வி விழிப்புணர்வு ஏற்படுத்தவும் ஆங்காங்கே கல்வி நிறுவனங்கள் உருவாக்கவும் கை விளக்கேந்திய காரிகையைப்போல் செயல்பட்டார்கள். அப்போது தான் சென்னையில் ஆல் இந்திய முஸ்லிம் எஜீகேஸனல் கான்பரன்ஸ் நடைபெற்றது. ஆக அதனைத் தொடர்ந்து உடனே 1901 ம் ஆண்டு வாணியம்பாடி முஸ்லிம்கள் “வாணியம்பாடி முகம்மதன் எஜீகேஷல் கான்பரன்ஸ்” என்று பெயர் பெற்றது, நூறு ஆண்டுகள் கடந்து இன்று நமது முன்னோர்கள் ஜாதி, மதம், இனம் என வேறுபாழன்றி மதச்சார்பற்ற கல்வியைக்கொடுப்பதற்கான தீர்மானத்ததை ஏற்படுத்தித்தந்தார்கள் இதனால்தான் இன்றம் வாணியம்பாழ “தென் இந்தியாவின் அலிகர்” என்று அழைக்கப்படுகிறது.”

1914 – ஆம் ஆண்டு வாணியம்பாழ எஜீகேஷனல் சொசைட்ழ ஏற்படுத்தப்பட்டது. இந்த சொசைட்ழ 1916 – ஆம் ஆண்டு ஒரு கல்வி மாநட்டை நடத்தியது. இதற்கு சர் அக்பர் ஹைதரி

தலைமை தாங்கினார் சர் சையத் அகமதுகானின் பேரன் சர் ராஸ் மசூணதம் இதில் பங்கேற்றார். இந்த அமைப்பின் கீழ் இஸ்லாமியக் கல்லூரி (தன்னாட்சி) இஸ்லாமியமகளிர் கல்லூரி, இஸ்லாமிய இண்டஸ்ட்ரியல் சென்டர், இஸ்லாமிய ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, இஸ்லாமியப் பெண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் இரண்டு ஆரம்பப் பள்ளிகள் செயல்படுகின்றன.

வாணியம்பாடி தமிழ்நாட்டின் வளம்மிகுந்த ஒரு பகுதியாகும், தொழிற்சாலை மற்றும் வணிக நிறுவனங்களும் நிறைந்த இந்த நகரம் கல்வியாளர்கள், அறிஞர்கள், கவிஞர்கள், யூனானி மருத்துவர்கள் மற்றும் பல தொழில்வல்லுநர்களினர் புகலிடமாக உள்ளது. ஆலிகர் கல்வி இயக்கத்தின் மிகப்பெரிய அளவில் மற்ற நகரங்களை விட வாணியம்பாடி தான் உற்சாகம் பெற்றது என்று சொன்னால் மிகையாகாது. இது குறித்து பேராசிரியர் மசூது ஹீசைன் கான் முனைவர் சையதா ஜாபர் தொகுத்த “மன் சம்ஜவான்” புத்தகத்தின் முகவுரையில் இவ்வாறு எழுதுகிறார்.

“கோல்குண்டா பேரரசு குறிப்பாகபீஜாப்பூரின் அழிவிற்குப்பிறகு தக்னி குடிமக்கள் கூட்டம் கூட்டமாக மைசூரு மற்றும் தமிழ்நாட்டின் பக்கம் சென்றடைந்தார்கள், இப்பழயாகத்தக்னி உருது தமிழகத்தில் தம்மை செழுமைப்படுத்திக் கொண்டிருந்தது.”[4]

ஆலிகர் கல்வி அயக்கத்தின் தாக்கம் புதுமை விரும்பிகள், அறிஞர்கள், செல்வந்தர்கள், முக்கிய பிரமுகர்கள், மற்றும் இளைஞர்கள் மத்தியில் மட்டும் மாற்றம் ஏற்படவில்லை, மாறாக இதன் தாக்கம் புகழ்பெற்ற கவிஞர்கள், மார்க்க அறிஞர்கள், மார்க்க கல்வி மதரஸாக்களின் அமைப்பாளர்கள் என அனைவரின் மீதும் இருந்தது.

தென்னிந்தியாவின் மிகப்பெரிய மார்க்கக்கல்வி நிறுவனமான பாகியாத் சாலிஹாத்தின் நிறுவனர் ஹஜ்ரத் மௌலானா அப்துல் வஹாப் சாஹெப் காதிரி (ஹஸ்ரத் மௌலானா ரஹமத்துல்லாஹ் கீரானவி அவர்களின் சீடர்) அவர்களின் புதல்வர் மௌலானா ஜியாவுத்தீன் முஹம்மத் அவர்கள் இந்த 15 – ஆம் மாநாட்டின் அமைப்பாளர்களில் முக்கியஸ்தராகவும் திகழ்ந்தார் இம்மாநாட்டின் கருத்தாக்கமும் அதன் தாக்கமும் மார்க்கக்கல்வி நிறுவனங்கள் மீது ஏற்படுவது அந்த காலத்திற்கேற்ப மிகவும் வரவேற்கத்தக்க மற்றும் வலுச்சேர்க்கும் ஒன்றாகும். இந்த மாநாட்ழன் தாக்கம் தானோ மௌலானா ஜியாவுத்தீன் முஹம்மத் சாஹெப் அவர்கள் 1919 - இல் மதரஸயே பாகியாத் சாலியாத்தின் பொறுப்பினை ஏற்கும் முன் தமது நகரமான வேலூரில் சமகால கல்வி மற்றும் கலையின் வளர்ச்சிக்காகவும், முஸ்லிம்களின் வேலை வாய்ப்பு மற்றும் அரசு உத்தியோகம் ஏற்படுத்தித் தருவதிலும் மும்மரமாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தார். மதரஸயே பாகியாத் சாலிஹாத்தின் 150 வது ஆண்டு விழாவின்போது வெளியிடப்பட்ட “அல்பாகியாத்” என்னும் மலரில் மௌலானா ஜியாவுத்தீன் முஹம்மத் சாஹெப் அவர்களின் சிந்தனை, சமகால கல்வி மற்றும் புதிய தொழில் நுட்பக் கல்வி மற்றும் தொழில் முனைப்பில் அவரின் செயல்பாடுகள் குறித்து நாம் அறிய முடிகிறது, கீழ்காணும் இந்த பத்தியைச் சான்றாகக் கூறலாம்.

1900 - ஆம் வருடம் வேலூர் நகரத்தில் மரஸாயே பாகியத் சாலிஹாத்தின் பின்புறம் “அன்ஜீமனே இஷாஅத்துல் ஹஸனாத்” என்னம் அமைப்பை ஏற்படுத்திச் சமுதாயத்திற்கு ஒரு தொழில் கற்க வழிகாட்டியாகத் திகழ்ந்தார்கள். தொழில்நுட்பத்தின் மூலம் அவர்களுக்குத் தொழிலைக்கற்றுத் தருவதற்கு மாதச் சமபளத்தில் பயிற்றுநர்களைப் பணியமர்த்தினார், அரசு அங்கீகாரம் பெற்று “இன்டஸ்டிரியில் சர்டிபிகேட்” என்றும் கல்வியையும் தொடங்கி வைத்தார். பின்பு இந்நிறுவனத்தை அரசுடன் இணைத்து அதற்கு அரசு மானியத்தையம் பெற்றுக் கொடுத்தார்கள்”. (5)

லெமௌலானா ஜியாவுத்தீன் முஹம்மது 1902 முதல் 1910 வரை மியாஸியின் இணைச் செயலாளராகவும் இருந்தார். நீதியரசர் பஷீர் அகமது சயீது அவர்கள் 1945 முதல் 1949 வரை மியாஸியின் செயலாளராக இருந்து பின்பு 1951 – ஆம் வருடம் சதர்ன் இந்தியா எஜீகேஷன் டிரஸ்ட் (எஸ்.ஐ.இ.டி) க்கு அடிக்கல் நாட்டினார். இந்த அமைப்பின் கீழ் எஸ்.ஐ.இ.டி முஸ்லிம் மகளிர் கல்லூரிக்கு மிகப் பிரமாண்டமாக 1955-ஆம் வருடம் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. இன்று இது பெயர் மாற்றம் பெற்று “நீதியரசர் பஷீர் அகமது சயீது மகளிர் கல்லூரி” எனச்செயல்படுகிறது. இது சென்னை மாநகரத்தின் மிகப்பெரிய கல்லூரிகளில் ஒன்றாகத்திகழ்கிறது. இதைத்தவிர மகளர்கென ஒரு மேல்நிலைப் பள்ளியும், ஆடவர்க்கு ஒரு மேல்நிலைப்பள்ளியும் இந்தச் சங்கத்தின் கண்காணிப்பில் செயல்படுகின்றன.

இதே போன்று நவாப்.சி.அப்துல் ஹக்கீம் அவர்களம் 1924 ஆம் ஆண்டு மியாசியின் தலைவராக இருந்து 1926 ஆம் வருடம் சென்னையிலிருந்து 80 கி.மீ தொலைவிலுள்ள மேல் விஷாரத்தில் ''மேல் விஷாரம் முஸ்லிம் எஜீகேஷனல் சொசைட்டி'' யை ஏற்படுத்தினார். இந்த சங்கத்தின் கீழ் ''சி.அப்துல் ஹக்கீம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி'', ''சி.அப்துல் ஹக்கீம் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக்கல்லூரி'', ''எம்.எம்.இ.எஸ் மகளிர்கல்லூரி'', ''எம்.எம்.இ.எஸ் ஆர்க்கிடெக்சர் கல்லூரி'' மற்றும் இரண்டு மேல் நிலைப்பள்ளிகளும் ஒரு உயர்நிலைப்பள்ளியும் மற்றும் நான்கு ஆரம்ப பள்ளிகளும்' செயல்படுகின்றன.

புகழ்பெற்ற உருதுகவிஞர்கள் காவிஷ்பத்ரி, மற்றும் தானிஷ் ஃபராஜியின் ஊரான ஆம்பூர் நகரம் சென்னையிலிருந்து 200 கி.மீ. தொலைவில் உள்ளது. இங்கே 1905 - ஆம் வருடம் ''ஆம்பூர் முஸ்லிம் எஜீகேஷனல் சொசைட்டி'' தோற்றுவிக்கப்பட்டத. இந்த அமைப்பின் கீழ் ''மஜ்ஹருல் உலூம் ஆரம்பப் பள்ளி'', ''மஜ்ஹருல் உலூம் கல்லூரி'', ''மஜ்ஹருல் உலூம் மேல்நிலைப் பள்ளி'', ''ஏ.எம்.இ.எஸ் கல்வியியல் கல்லூரி''. ''மஜ்ஹருல் உலூம் மகளிர் பயிற்சி நிலையம்'', ஹஸனாத் ஜாரியா மேல் நிலைப் பள்ளி'', ''ஷஸனாத் ஜாரியா ஆரம்ப பள்ளி'' கல்வி நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன.

தமிழகத்தில் தமிழக முஸ்லிமகளின் கல்வி தொடர்பாகப் பெரும் பாடுபட்ட நபர் ஜமால் முகம்மது என அறியப்படுகிறது. இவர் 1935 முதல் 1941 வரை மியாசியின் தலைவராக இருந்தார் இவருடைய கல்விச் சேவையும் ஊக்கமும் பற்றிய பரவலான புகழ் நாடெங்கும் பரவி இருந்தத. முனைவர் அப்துல் ஹக் மேனாள் இணை வேந்தர் அலிகர் முஸ்லிம் பல்கலைகழகம் தனது புத்தகம் ''இன்ஷாயே ஹக்'' கில் இவ்வாறு எழுதுகிறார்.

''ஸ்மிர்னா (SMYRNA) பண்டுக்காக மஸீஹீலு் முல்க் ஹகீம் அஜ்மல்கான் அவர்கள் தில்லியில் அவரிடம் (ஜமால் முகமதுவிடம்) நன்கொடை கேட்டபோது அவர் உடனே காசோலை புத்தகத்தை நீட்டி அஜ்மல் கான் அவர்களை அதிலே தான் விரும்பும் தொகையை நிரப்பிக் கொள்ள அனுமதியம் அளித்துவிட்டார். ஆனால் ஹகீம் சாஹெப் அவர்கள் ஜமால் முகமதுவை தான் விரும்பும் தொகையைத் தானெ நிரப்பித்தர கூறியபோது ஜமால் முகமத அவர்கள் ஒரு இலட்ச ரூபாய் காசோலை எழுதிக் கொடுத்திருந்தார்கள். இதைப் பார்த்து அமரர் ஹகீம் சாஹெப் வியந்து போனாராம்.''[6]

ஜமால் முஹம்மத் அவர்கள் 1926 – ஆம் ஆண்ட மௌலானா சையயது சுலைமான் நத்வி அவர்களுக்குச் சென்னை வர அழைப்பு விடுத்து வரலாற்றுச் சிறப்பு மிக்க சொற்பொழிவுகளை ஏற்பாடு செய்திரந்தார். பிறகு இந்த சொற்பொழிவுகள் புத்தமாக ''குத்பாத-ஏ-மதராஸ்'' என்ற பெயரில் தாருல் முசன்னிஃபீன் ஆஜம்கரிலிருந்து வெளியிடப்பட்டது. 1927 – ஆம் வருடம் ஜமால் முஹம்மத் அவர்கள் முஹம்மத் மார் பிகதாலை அழைத்து இஸ்லாமிய கலாச்சாரம்' என்னும் பொருண்மையில் ஆங்கிலத்தில் ஆறு தொடர் சொற்பொழிவுகளை நிகழ்த்தச் செய்தார் இதன் பல பிரதிகள் வெளியிடப்பட்டன. ஜனாப். ஜமால் முஹம்மத் அவர்களின் அழைப்பை ஏற்று 1928 – ஆம் வருடம் உலக உருது மகாகவி அல்லாமா இக்பால் அவர்கள் சென்னை வந்தார்கள் மேலும் இங்கே ஆங்கிலத்தில் ''இஸ்லாமியக் கல்வியியல்'' பொருண்மையில் சிறப்பான சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். இதனை பிறகு ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக அச்சகம் ''குத்பாத-ஏ-மதராஸ்'' புத்தகமாக வெளியிட்டது. இதன் பல பிரதிகள் வெளியே வந்தன. ஜமால் முஹம்மத் அவர்களின் தனித்தன்மை மற்றும் பண்பினால் அல்லாமா இக்பால் மிகவும் கவரப்பட்டார். அதன் வெளிப்பாடு அவர் இவ்வாறு செய்தார்.

''ஹாஜி ஜமால் முஹம்மத் அவர்களின் குணத்தினால் நான் மிகவும் கவரப்பட்டேன். ஒரு நபர் சாதாரண உடையில் இருக்கிறார். கோடிக்கணக்கில் வர்த்தகம் செய்கிறார். மேலும் கடினமான தத்துவங்களைப் பற்றியும் உரையாற்றுகிறார். இஸ்லாம் இது போன்ற உயர்ந்த சிந்தனை மற்றும் சாதாரண வாழ்க்கையைத்தான் (Plain living and high thinking) கற்றுத்தருகிறது. தோற்றமோ

சந்நியாசியைப்போல மனமோ அரசனைப் போன்றுள்ளது, இப்படிப்பட்ட வாழ்க்கையைத்தான் நபி (ஸல்) அவர்களும் கற்றுத் தந்தார்கள்[7]

இச்சமயத்தில் முனைவர் அப்துல் ஹக் (முன்னாள் முதல்வர் மாநிலக்கல்லூரி சென்னை அவர்களின் இந்த நீண்ட விளக்கத்தினை இங்கே எழுதுவதும் பொருத்தமாக இருக்கும். இதில் ஜமால் முஹம்மதுடன் வட இந்திய கல்வி நிறுவனங்கள் மற்றும் ''ஆல் இந்தியா முஸ்லிம் எஜீகேஷனல் கான்பரசின்'' 1927 - ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற 15 – ஆம் மாநாட்டின் செயல்களும் நம் கண் முன்னே தோன்றும்.

''அநேகமாக 1927 – ம் வருடம் டிசம்பர் மாதம் அப்பொழுது பல காரணங்களால் ஜாமியா மில்லியா இஸ்லாமியா (பல்கலைகழகம், டெல்லி)யின் பொருளாதாரம் மிகவும் பின் தங்கி இருந்த நிலை மர்ஹீம் மஸீஹீல் முல்க் அஜ்மல்கான் அவர்கள் சென்னை சென்று இந்தப் பல்கலைகழகத்திற்கு நிதி திரட்டலாம் என எண்ணினார். அந்தக்காலகட்டத்தில் தான் அகில இந்திய காங்கிரஸின் மாநாடு சென்மையில் நடைபெற இருந்தது. அதன் தலைவராக மறைந்த முனைவர் அன்சாரி அவர்கள் இருந்தார்கள் மற்றும் ஆல் இந்திய முஸ்லிம் எஜீகேஷனல் கான்பரஸின் விழாவும் மறைந்த சர் அப்துல் காதர் அவர்களின் தலைமையில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. டிசம்பர் கடைசி வாரத்தில் இந்த கூட்டங்கள் கூடி இருந்த நிலையில் மறைந்த மஸீஹுல் முல்க் அவர்கள் டாக்டர் ஜாகிர் உசேன் (முன்னாள் குடியரசுத்தலைவர்) அப்போதைய ஜாமியா மில்லியா இஸ்லாமியா பல்கலையின் துணைவேந்தராக இருந்தவரை சென்னைக்கு அனுப்பி வைத்துத் தானும் காங்கிரஸின் விழாக்கள் நடைபெறும் காலத்திற்குள் சென்னை வந்த விடுவதாக்கூறியிருந்தார். இந்த ஏற்பாடு மஸீஹீல் முல்க் அவர்கள் தான் எண்ணியபடி செய்திருந்தார். ஆனால் வல்லோன் இறைவனுக்கு வேறு நாட்டம் இருந்தது. இச்சமயம் ஹகீம் சாஹெப் அவர்கள் ராம்பூரிலிருந்து தில்லி வருகையில் மாரடைப்பால் ரயில் பயணத்திலேயே உயிர் பிரிந்தது. அப்பொழுது டாக்டர் ஜாகிர் உசேன் அவர்கள் சென்னை வந்தடைந்திரந்தார்கள். ஒவ்வொரு நாளம் அவர் மஸீஹீல் முல்க அவர்களின் வருகைக்காகக் காத்திருந்தார்கள். திடிரென இந்த உயிர் பிரிந்த சம்பவம் பத்திரிக்கை வாயிலாக வந்தடைந்தது. இந்த செய்தி டாக்டர் ஜாகிர் உசேன் அவர்களை மிகவும் துன்பத்தையும் அதிருப்தி நிலையையும், கவலையையும் சந்திப்பு ஏற்பட்டது. அந்தக்காலகட்டத்தில் டாக்டர் ஜாகிர் உசேன் உடன் என்னுடைய முதல் சந்திப்பு ஏற்பட்டது, இது தொடர்பாக நானும் ஜாமியா மில்லியாவின் மீது பற்றுக்கொண்ட சிலரும் மறைந்த ஜமால் முஹம்மமது அவர்களைச் சந்தித்து ஹகீம் அஜ்மல்கான் அவர்களின் எண்ணத்தை அவருக்கு தெரிவிக்கவேண்டும் என முடிவு செய்யப்பட்டது. அதன்படி டாக்டர் ஜாகிர் உசேன் அவர்கள் ஜாமியா மில்லியா பல்கலைகழகத்தின் நிதி பற்றாக்குறை நிலையையும் விவரித்ததுடன் இது தொடர்பாக மஸீஹீல் முல்க் அவர்களின் எண்ணத்தையும் அவருக்கு தெரிவித்தார்கள். உடனே ஜமால் முஹம்மது அவர்கள் இன்முகத்துடன் உதவிக்கான உறுதியையும் கொடுத்தார். ஓரிரு நாட்களில் அவர்கள் டாக்டர் ஜாகிர் உசேன் அவர்களுக்குத் தேனீர் விருந்திற்கு அழைப்புவிடுத்தார்கள். அதில் சென்னையைச் சேர்ந்த பல வணிகர்களும், செல்வந்தர்களும் கலந்து கொண்டார்கள். அங்கேயே ஜாமியா மில்லியா இஸ்லாமியாவிற்காக அவர்கள் தாமாக முன் வந்து தனது குடும்பத்தாரின் சார்பாகவும் சுமார் 70 ஆயிரம் ரூபாய் நன்கொடை அளித்தார்கள். இதன்பிறகு சென்னையைச்சேர்ந்த இதர வணிகர்களும் 40 ஆயிரம் ரூபாய் நன்கொடைகள் வழங்கினார்கள். சில நாட்களிலேயெ ஒரு லட்சத்து பத்தாயிரம் ரூபாய் பெருந் தொகை சேர்ந்து விட்டது ஜாமியா மில்லியா இஸ்லாமியாவின் வரலாற்றில் இது ஒரு கடினமான காலமாகும். இதனால் இதன் காரியஸ்தர்களும் பல சோதனைகளுக்குப்பின் விரக்தி என்ற நிலைக்கே சென்று விட்டிருந்தனர். இப்படிப்பட்ட நிலையில் சென்னைவாசிகளின் உதவிக்கரத்தால் ஜாமியா மில்லியாவிற்கு மீண்டும் உயிர் பெற்று புதுப்பொலிவுடன் புத்துணர்வு கிடைத்தது''. (8)

ஜமால் முஹம்மது அவர்களின் கல்விச்சேவை, கல்வி நிறுவனங்களை அமைத்தல் மற்றும் அதரவற்ற அனாதை ஏழைக் குழந்தைகளுக்குப் பொருளாதார உதவி மற்றம் கல்விப் பாதுகாப்பு, தங்கும் இல்லங்கள் கட்டுதல் ஆக இது போன்ற பல சேவைகள் செய்யப்பட்டன. சென்னையில் மதரஸயே ஜமாலியா (1898) மற்றும் சென்னையிலிருந்து 400கி.மீ. தொலைவில் திருச்சி மாநகரத்தில் பிரமாண்டமான ''ஜமால் முஹம்மது கலை மற்றும் அறிவியல் கல்லூரி'' இன்றும் அன்னாரின் நினைவாகத் திகழ்கிறது.

இன்று ஒரு நூற்றாண்டு கடந்த பிறகும், இங்கு ஏதாவது கல்வி மற்றும் இலக்கியச் செயல் முறைகளில் நாம் முன்னேறியுள்ளோம் என்றால் அதற்கு இந்த ‘‘அலிகா் இயக்கம்’’ தான் வித்தாகும். 1901 – ஆம் மற்றும் 1927 – ஆம் வருடங்களில் சென்னையில் நடைபெற்ற ‘‘கல்வி மாநாடுகள்’’ தான் இதற்கு ஒரு நல்ல வாய்ப்பினை ஏற்படுத்தித்தந்தன.

மியாசியின் தொடக்கம் அது அலிகா் இயக்கத்தின் ஒரு கிளையே தவிர வேறில்லை. இது தமிழக முஸ்லிம்களின் சமகால கல்வியில் ஒரு மைல்கல் ஆகும். இந்தக் கலங்கரை விளக்கு எத்தனையோ பேருக்கு வழிகாட்டியாகத் திகழ்கிறது. இது 1901 – ஆம் ஆண்டு ‘‘அலிகா் இயக்கத்தினால்’’ புத்துணா்வு பெற்று புறப்பட்ட படை. இப்படையிலிருந்து பல படைகள் தோன்றியது. ஒரு விளக்கினால் மற்றொரு விளக்கு ஒளி பெறுவது போல் அலிகா் குழுவினால் சென்னையில் ஏற்றப்பட்ட விளக்கு ஒளிபெற்று அந்த ஒளியானது மாநிலம் முழுவதும் ஜோதியைப் பெருக்கியது. 27 செப்டம்பா் 1901 – ஆம் ஆண்டு மாநாட்டின் முதல் நாள் விழாவில் தலைமை தாங்கிய ‘‘நீதியரசா் போடாம்’’ மதராஸ் பிரசிடென்சியில் முஸ்லிம்களின் கல்வி விகிதாச்சாரத்தினைக் குறிப்பிட்டு பேசும்போது மிகவும் வேதனை அடைந்திருந்தார். அவா் பேசுகையில் இந்த வருடம் 7230 பட்டதாரிகள் பட்டம் பெற்றார்கள். இதில் முஸ்லிம்களின் எண்ணிக்கை 57 மட்டுமே எனக்வுறியிருந்தார். ஆனால் இன்று தமிழ்நாட்டில் முஸ்லிம்களின் கல்வி விகிதாச்சாரம் நன்றாக உள்ளது. இதற்கு மூல காரணம் கல்விக்கு வித்திட்ட சமுதாயத்தின் தந்தை சா் சையது அகமது கான் அவா்களே.

**குறிப்புகள்**

1. முகம்மதன் ஆங்கிலோ ஓரியன்ட்டல் கான்பரசிஸின் பதினைந்தாவது மாநாடு, இரண்டாம்பாகம், பக் - 7
2. முகம்மதன் ஆங்கிலோ ஓரியன்ட்டல் கான்பரசிஸின் பதினைந்தாவது மாநாடு, இரண்டாம்பாகம், பக் 47
3. ‘‘அக்ஸே வாணியம்பாடி:, - அக்பா் ஜாஹித் பக் - 33
4. ‘‘மன் சம்ஜவான்’’ தொகுப்பாளா் டாக்டா் சைய்யதா ஜாபா், அச்சீடு.
5. ‘‘மஷாஹீா்- ஏ – ஜீனுப்’’, பாகியாத் மலா், ஜாமியா பாகியாத் சாலிஹாத் வேலூா், பக் - 136
6. ‘‘இன்ஷா – ஏ - ஹக்’’ முனைவா் அப்துல் ஹக், தொகுப்பாளா் அன்வாருல் ஹக், தொகுப்பாளா் அன்வாருல் ஹக், பக் - 26
7. ‘‘இன்ஷா – ஏ - ஹக்’’ முனைவா் அப்துல் ஹக், தொகுப்பாளா் அன்வாருல் ஹக், பக் - 30
8. ‘‘இன்ஷா – ஏ - ஹக்’’ முனைவா் அப்துல் ஹக், தொகுப்பாளா் அன்வாருல் ஹக், பக் - 32.